**சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் செப்டம்பர் மாதம் (30.09.2020) ஆம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் 08/2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.982,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் கட்டிட வரைபட பொறியாளராக (Grade-III) பதிவு செய்ய வேண்டி திருமதி.பி.அமுதினி க/பெ எஸ்.பிரபு, கூடலூர் என்பவர் விண்ணப்பித்துள்ளர். மேற்படி வரப்பெற்ற விண்ணபத்தின்படி அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டதன் அடிப்படையில் அன்னாரை இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் பதிவு பெற்ற கட்டிட வரைபட பொறியாளராக பதிவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண். 1557/2020/எப்1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகரமைப்பு பிரிவில் கட்டிட வரைபட பொறியாளராக, நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டு நிபந்தனையுடன் பதிவு செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.983,அங்கீகரிக்க**ப்பட்டது.

**பொருள்.3**

கூடலூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்ட நிதி (TURIP 2020-21) ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை பணிகள் குறித்த ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை மாநில அளவிளாள ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்காக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜன்சீஸ் சென்னை அவர்களுக்கு விளம்பரக் கட்டணத் தொகை **ரூ.1,10,729**/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.929/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.984,அனுமதிக்க**ப்பட்டது

**பொருள்.4**

இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் கட்டிட வரைபட பொறியாளராக (Grade-III) பதிவு செய்ய வேண்டி திரு.P.மணிகண்டன் என்பவரால் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கப்பட்டு. மேற்படி வரப்பெற்ற விண்ணபத்தின் அடிப்படையில் அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டபோது , மனுதாரர் Diploma-Civil பட்டயப்படிப்பினை முடித்த இரண்டு ஆண்டுகள் மட்டுமே முடிவடைந்துள்ளதால்,Grade-III பதிவு செய்வதற்கு தகுதியற்றவராக கருத்தில் கொண்டு மேற்படி வரப்பெற்ற விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.அதன்படி விண்ணபத்திற்கு செலுத்தப்பட்ட பதிவுக்கட்டணம் ரூ.5000/-ஐ திரும்ப வழங்க வேண்டி அன்னார் மூலம் வரப்பெற்ற கோரிக்கையின்படி, மனுதாரருக்கு பதிவுக்கட்டணத்தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண். 1787/2020/எப்1)**

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.985,அனுமதிக்க**ப்பட்டது

**பொருள்.5**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-3,புல எண்.1221/2Aக்கு உட்பட்ட தனியாருக்கு சொந்தமான பட்டா நிலத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியினை, வார்டு-2,3 மற்றும் 4ல் வசிக்கும் பொது மக்கள் வேண்டுக்கோளுக்கிணங்க கழிவுநீர் வாய்க்கால் மற்றும் பிற வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு, மேற்படி நிலத்திற்கு சொந்தமான உரிமையாளர்கள் திருவாளர்கள் பா.செல்லையா, சீ.முத்துச்சாமி, போ.அருண்மணி அவர்களால் மேற்படி நிலத்தினை ஆணையாளர் கூடலூர் நகராட்சி பெயரில் **ஆவணஎண்.1977/2020 நாள்.19.06.2020** தானப்பத்திரம் பதிவு செய்து தரப்பட்டுள்ளது.

பொது மக்களின் நலன் மற்றும் நகரின் எதிர்காலம் கருதி ஆவணத்தில் தானமாக வழங்கப்பட்டுள்ள நிலத்தினை இந்நகராட்சியின் மூலம் கையகபடுத்தியும் ,சாலை பதிவேட்டில் பதிவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.406/2020/எப்1)**

<u>**சாலைகளின் விபரம்**</u>

1) அகலாம் - 18 அடி  நீளம் - 340 அடி
2) அகலாம் - 14 அடி  நீளம் - 340 அடி
3) அகலாம் - 14 அடி  நீளம் - 340 அடி
4) அகலாம் - 4 அடி  நீளம் - 263 அடி

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.986,அனுமதிக்க**ப்பட்டது

**பொருள்.6**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் , கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழக்கூடலூர் கிரமாம் நில அளவை எண் 1052/1C-மேலக்கூடலூர் கிராமம் சர்வே எண்கள் **1156/1c,2c,1253/1c , 1260,1261,1262,1268/1,2,1269/2, மற்றும் 1269/3B**–ல் அமையும் **20.97 ½** ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களிடம் தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டு வரப்பெற்ற சாலை வரைப்படத்தில் **(Road Pattern)** குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் மூலை முடக்குகள்- **26529.24** ச.மீ ,பூங்காக்கள்-**5926.77**ச.மீ ஆகியவற்றிற்கான இடங்கள் மற்றும் மேற்படி வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளில் மழைநீர் வடிகால் ,சிறு பாலங்கள் ,தார்சாலை மற்றும் தெரு விளக்குகள் போன்ற பணிகள் முடிக்கப்பட்டு கூடலூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் மூலம் தமிழக மேதகு ஆளுநர் அவர்களுக்கு தானப்பத்திரப்பதிவு (**ஆவணஎண்.3120/2020 நாள்.11.09.2020)** செய்யப்பட்டது. மேற்படி சாலைகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றிற்கான இடங்கள் தானமாக பெறப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களிடம் உத்தேச மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் பெறும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். **(ந.க.எண்.3482/2014/எப்1)**

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பூங்காக்கள் ஆகியவற்றிற்கான இடங்களை இந்நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டதனை மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர் ஊரமைப்பு ஆணையர்,சென்னை அவர்களுக்கு உரிய மேல் நடவடிக்கைக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.987,அனுமதிக்க**ப்பட்டது

**பொருள்.7**

இந்நகராட்சி பகுதிகளில் உலகளாவிய தொற்று நோயான கொரோனா வைரல் தொற்று பரவுவதை தடுக்க, கிருமி நாசினி தெளிக்கும் பொருட்டு பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE (LCV) வாகன எண்.TN 60 AY 4020 வாகனத்தின் கிளச் பிளேட் பழுதடைந்து விட்டதால் வண்டியை பழுது நீக்கம் செய்யும் பணியினை மேற்கொள்ள **19.08.2020 ஆம்** நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. **(ந.க.எண். 296 /2020 /எச்1)**

| வ. எ ண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ஒரு மணிக்கு) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE (LCV) வாகன எண்.TN 60 AY 4020 வாகனத்தின் கிளச் பிளேட் பழுதடைந்துவிட்டதால் வண்டியை பழுது நீக்கம் செய்யும் பணியினை மேற்கொள்ளுதல் | ஸ்ரீமுருகன் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் | ரூ.14000/- |
| | | ஸ்ரீசாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ் கம்பம் | ரூ.14500/- |

**அலுவலககுறிப்பு : –**

வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் ஸ்ரீமுருகன் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.988,அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள்.8**

கூடலூார் நகராட்சி வார்டு எண்-03 எல்லைத்தெரு குறுக்குத்தெரு மற்றும் வார்டு எண்-13, எம்.ஜி.ஆர் காலனி குறுக்கு தெரு ஆகியவற்றில் ஏற்கனவே பகிர்மான குழாய்கள் இல்லாத காரணத்தினால் புதிதாக பகிர்மான குழாய்கள் அமைக்க ரூ.1,10,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியில் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.989,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.9**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உலகலாவிய தொற்று நோயான கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை தடுக்க நாள் தோறும் கூடலுர் நகராட்சி எல்லையானது கேரள எல்லைப்பகுதியில் அமைந்துள்ளதால் குமுளியில் நாள் தோறும் அனைத்து வாகனங்களிலும் Lysal தெளிக்கப்பட்டு கிருமி நாசினியாக நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளீச்சிங் பவுடர் கலந்தகலவை நகரின் அனைத்து பகுதிகளிலும் பயன்பாட்டில் உள்ளதால் இருப்பு குறைவாக உள்ளது. ஏனவே நீத்த சுண்ணாம்புத்தூள் 5000 கிலோ, பிளிச்சிங் பவுடர் 2000 கிலோ மற்றும் Lysal 500 லிட்டர் சப்ளை செய்ய உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ3,70,000/.–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.(ந.க.எண்.1782/2020/எச்1)

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படிசெலவினம் பொதுசுகாதாரஅவசரஅவசியம் கருதியும் , பொதுமக்களின் நலன் கருதியும் நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.990,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.10**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 54 நபர்கள், 2 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், 1 அலுவலக ஈப்பு ஓட்டுநர் , 2 பொது சுகாதார வாகன ஓட்டுநர்கள், 3 குடிநீர் பணியாளர்கள் , 2 மின் பணியாளர்கள், 1 பூங்கா காவலர், மற்றும் 1 அலுவலக உதவியாளர் உட்பட 66 நிரந்தர சீருடைப் பணியாளர்களுக்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்கிட ஆகும் உத்தேச செலவீனம் ரூ**2.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு **(ந.க எண்:1625/2020/எச்1)**

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.991,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.11**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்தில் இருந்து வரும் பொளிரோ ஈப்பு வாகனம் எண் TN-60 Y-7332 ற்கு 15 ஆண்டுகள் முடிந்து தகுதிச் சான்று வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பெறும் பொருட்டு வாகனத்தை இயக்க ஏற்கனவே உள்ள பேட்டரி நான்கு ஆண்டுகள் ஆனதால் பழுதடைந்து உள்ளது. எனவே புதிய பேட்டரி வாங்கி இயக்க 02.09.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.406/2020/இ1)**

| வ.எண் | பெயர்(ம)முகவரி | தொகை(ரூ.) |
|---|---|---|
| 1. | பெரியார் பேட்டரி சென்டர்-கம்பம் | ரூ.6,700/– |
| 2. | விநாயகா பேட்டரிஸ் - கம்பம் | ரூ.6,900/- |
| 3. | நூதனா டிரேடர்ஸ் - கம்பம் | ரூ.6,950/- |

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள பெரியார் பேட்டரி சென்டர் கம்பம் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி அலுவலக உபயோகத்திற்கு உள்ள வாகனத்திற்கு புதிய பேட்டரி (12HV. 80AH ) வாங்கி பொருத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.992,அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள்.12**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்தில் இருந்து வரும் பொளிரோ ஈப்பு வாகனம் எண் TN-60 R-6378 ற்கு 15,000 Km க்கு ஓடியுள்ளதால் அவ்வாகனம் ஆய்வுக்கூட்டங்களுக்கு செல்ல வேண்டி உள்ளதாலும் வாகன அவசர அவசியம் கருதி 03.08.2020 அன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.592/2020/இ1)**

| வ.எண் | பெயர்(ம)முகவரி | தொகை(ரூ.) |
|---|---|---|
| 1. | அகரம் மோட்டார்ஸ்-கம்பம் | ரூ.35,700/– |
| 2. | M.S.A மோட்டார்ஸ் - கம்பம் | ரூ.43,900/- |
| 3. | நவீன் ஆட்டோ ஒர்க்ஸ் - கம்பம் | ரூ.38,600/- |

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள அகரம் மோட்டார்ஸ் கம்பம் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.993,அங்கீகரிக்கப்பட்டது**